பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 17 சனிக்கிழமை (30-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 64

# புலிகளுடன் பேசுவதற்காக ஒஸி வடக்கே வர முயற்சி!

### கிட்டுவுக்கு அனுதாபம் தெரிவித்து

## பாட்டாளிகட்சிநடத்த முயன்ற பேரணிக்கு அனுமதி மறுப்பு!

### எதிர்த்து வழக்குத் தாக்கலாகும்

சென்னை, ஜன. 30

விடுதலைப் புலிகள் தளபதி கிட்டுவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து பாட்டாளி மக்கள் கட்சி கடந்த புதனன்று சென்னையில் நடத்த விருந்த மௌன ஊர்வலம் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த ஊர்வலத்தை நடத்த தமிழக அரசு அனுமதி வழங்க மறுத்ததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப் படுகிறது.

''தமிழக அரசின் தடையை எதிர்த்து நியாயம் கோரி நீதி மன்றம் செல்வோம்; அதன் பின்னர் மௌனாஞ்சலி ஊர்வலம் நடத்துவோம்'' — என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார். (உ-எ)

### ராமதாஸ் எச்சரிக்கை:

## பாட்டாளி கட்சியைத் தடை செய்தால் விபரீதம் வரும்

சென்னை, ஜன. 30

இந்திய மத்திய அரசு, பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்தால் அது கடும் விளைவுகளை ஏற்படுத்தும்.

மதுரையில் நடந்த தியாகிகள் அஞ்சலிக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் முன்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

தமிழரின் நலன்களுக்கு எதிராக பிராமண சமூகம் செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பகிரங்கமாகச் செயற்பட்டு வருவதைக் காரணம்காட்டி, பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்ய மத்திய அரசு திட்டமிட்டிருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ-எ)

### கிட்டு மறைவுக்கு

## பழி தீர்ப்பதற்காக புலிகள் இந்தியாவில் ஊடுருவலாம்!

சென்னை, ஜன. 30

விடுதலைப் புலிகள் தளபதி கிட்டு உயிரிழக்க நேரிட்ட சம்பவத்துக்கு பழிவாங்குமுகமாக விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் இந்தியாவில் சென்னையிலும் புதுடில்லியிலும் ஊடுருவியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வெளிவரும் த ஐலண்ட் பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது. (உ-அ)

### கப்பலில் வந்த

## உணவுப் பொருள்களை பங்கிடுவதில் திண்டாட்டம்

'குமாரி' கப்பலில் கொண்டு வரப்பட்டு, செயலக புனர்வாழ்வுப் பகுதியால் விநியோகிக்கப்பட்ட உணவுப் பொருள்களை தமது பகுதி மக்களுக்கு எவ்வாறு பங்கீடு செய்வது என்று தெரியாமல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவும் திண்டாடுகின்றன.

தமது சங்கங்களின் கீழ் அடங்கும் குடும்பங்களுக்குத் தேவையானதை விடக் குறைந்த அளவு அரிசி, மா, சீனி, ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தமக்கு வழங்கப்பட்டதாலேயே இந்நிலை ஏற்பட்டதாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றினதும் தலைவர்கள் குறைபட்டுக் கொண்டனர்.

தமக்குக் கிடைத்த உணவுப் பொருள்களை பங்கீட்டு அட்டைகளுக்கு சமமாக விநியோகிப்பதானால் ஒவ்வொருகுடும்பத்துக்கும் நிர்ணயிக்கப்பட்ட அளவு உணவுப் பொருள்கள் கிடைக்காமற் போகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள் (அ)

## சிறிமா குடும்பப் பிணக்கு: சமரசம் வேண்டுகிறார் ஜா

கொழும்பு, ஜன. 30

''உங்கள் குடும்பப் பிணக்கைத் தீர்த்துக்கொள்ளுங்கள்.''

— இவ்வாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடும்ப உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார் ஓய்வு பெற்று நாடு திரும்பும் இந்தியத் தூதர் என். என். ஜா.

தூதுவர் ஜாவுக்கு சிறிமா குடும்பத்தவர்கள் அண்மையில் அளித்த இரவுப்போசன விருந்தின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சிறிமா, அவரின் பிள்ளைகளான அநுரா பண்டாரநாயக்கா, சந்திரிகா குமாரணதுங்க மற்றும் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே இந்த விருந்து நிகழ்ச்சியில் பங்குபற்றினர். (உ-6)

## மத குருமாருடன் சேர்ந்து விஜயம் செய்வாராம்

யாழ்ப்பாணம், ஜனவரி 30

விடுதலைப் புலிகளுடன் சமாதானப்பேச்சு வார்த்தை நடத்துவதற்காக ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் (ஒஸி) பிரிவுத் தலைவரும் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் தற்போது மிக நெருக்கமானவர் எனக் கருதப்படுபவருமான ஒஸி அபேகுணசேகரா விரைவில் வடக்கே வருவார்.

கத்தோலிக்க குருமார் சிலருடனும், முன்னர் யாழ். வந்து திரும்பிய பிக்குகள் இருவருடனும் இணைந்து யாழ்ப்பாணம் வருவதற்கு ஒஸி அபேகுணசேகரா ஆயத்தமாகி வருகிறார்.

''லக்திவ'' சிங்கள வார இதழ் இத்தகவலைத் தெரிவிக்கிறது.

அரசாங்கம் தான் நேரடியாகப் புலிகளுடன் பேசுவதாகப் பொதுமக்களுக்குக் காட்டாமல் இருப்பதற்காக, ஒஸி மூலம் புலிகளுடன் பேசவிரும்புகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது இதேவேளை ஒஸியின் விஜயத்துக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று காட்டிக்கொள்ளவும் அது முயற்சிப்பதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கே எடுத்து வர

## சில பொருள்கள் மீதான தடை நீக்கப்படலாம்

கொழும்பு, ஜன. 30

வட பகுதிக்கு எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டிருக்கும் மேலும் சில பொருள்கள் மீதான தடையைத் தளர்த்துவது குறித்து ஆராயப்படுகிறது

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கொழும்பில் கடந்த வியாழன் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை தெரிவித்தார். (உ-எ)

## ஆஸ்திரியாவில் இறந்தோர் தென்னிலங்கையர்களாம்!

கொழும்பு, ஜன. 30

ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் வீதி ஓரத்தில் கடந்த புதன்கிழமை இறந்து கிடக்கக் காணப்பட்ட ஐவரும் தென்னிலங்கையர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்கள் பற்றிய மேலதிக விவரங்களைப் பெறுவதற்காக இலங்கை வெளியுறவு அமைச்சு ஜேர்மன் தலைநகர் பொன்னில் உள்ள இலங்கைத் தூதர் கறு ஜெயசூரியாவுடன் தொடர்பு கொண்டுள்ளது (த-எ)

### முச்சந்தி முரளி



குடும்பச் சண்டையிலை தலை போடவும் அமைதிப் படையை அனுப்பினாலும் அனுப்புவினம்...!

## சுவிஸ் பிரஜை வெளியேற்றம்

யாழ்ப்பாணம், ஜன 30

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடிதம் ஒன்றை வைத்திருந்ததாகக்கூறப்படும் சுவிஸ் பிரஜையான ஏர்னஸ் லக்ஸ்பேர்கஸ் கடந்த வியாழன் நாடு கடத்தப்பட்டார்.

இவர் அநுராதபுரத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்றும் —

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கொள்வனவு செய்வதில் இவர் பங்கு கொண்டார் என்றும் கொழும்புப் பத்திரிகைகள் ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தமை தெரிந்ததே. (உ-எ)

## வவுனியா தடை முகாமில் பயணிகள் மீது கெடுபிடி!

யாழ்ப்பாணம், ஜன 30

வவுனியா தடை முகாமில் தமிழ்ப் பயணிகள் மீது இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆண்களும், பெண்களும் புலனாய்வுப் பிரிவினரால் தீவிரமாக விசாரிக்கப்படுவதாகவும்—

பயணிகள் தாக்கப்படும் சம்பவங்களும் இடம் பெற்றுவருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்தினரின் கெடுபிடி நடவடிக்கைகளுக்கு 'புளொட்' தேசவிரோத குழுவினர் துணைபுரிவதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-5)

## வாங்கி நான்கு நாட்களில் பழுதடைந்த விமானங்கள்

### எயர் லங்கா நெருக்கடியில்!

கொழும்பு, ஜன. 30

எயர் லங்கா நிறுவனம் சமீபத்தில் கொள்வனவு செய்த எயர் பஸ் விமானங்கள் கொள்வனவு செய்து சில நாட்களிலேயே பழுதடைந்து விட்டதால் அந்த நிறுவனம் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

சர்வதேச அவ்ரோ என்ஜினியரிங் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஏழு எயர் பஸ் விமானங்களை 10 லட்சத்து 800 அமெரிக்க டொலர் செலவில் எயர் லங்கா நிறுவனம் அண்மையில் கொள்வனவு செய்தது. அதனையடுத்து பல புதிய சர்வதேச விமான சேவைகளையும் எயர் லங்கா ஆரம்பித்தது.

ஜனவரி 10 ஆம் திகதி எயர் லங்காவுக்குக் கிடைத்த இந்த விமானங்கள் ஜனவரி 15 இல் முதன் முதலில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. ஆனால் அந்த விமானங்கள் பழுதடைந்தமையால் ஜனவரி 18 ஆம் திகதி — நான்கு நாட்களுக்குள் — அந்த விமானங்களை சேவையிலிருந்து நிறுத்த வேண்டிய நிலைக்கு எயர் லங்கா தள்ளப்பட்டது

எனினும் விமானத்தை உற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி தபால் சோதனை; பாதுகாப்பே காரணம்!

### ஹமில்டன் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 30

வட பகுதிக்கு அனுப்பப்படும் தபால்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே கிழித்து சோதனையிடப்படுகின்றன.

கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலரிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடபகுதி தபால் விநியோகத்தை சீர்செய்வது பற்றிப் பேச்சு நடத்த கொழும்பு சென்றிருந்த வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு எஸ். எம். சேதுகாவலர் கடந்த செவ்வாயன்று யாழ் திரும்பினார்.

தபால்கள் கிழிக்கப்பட்டு வருவது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா என்று அவரிடம் கேட்கப்பட்ட போது, அவர் தெரிவித்ததாவது:

இந்த விடயம் பற்றி கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவிடம் எடுத்துக் கூறினேன்

தபால்கள் உடைக்கப்படுவதால் வரும்பாதிப்புகளை அவர் ஏற்றுக் கொண்டார். பாதுகாப்பு காரணங்களுக்காகவே

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை நிறுத்தக் கோரி கையெழுத்து இயக்கம்

### ஆசிரியர் சங்கம் முயற்சி

உடுவில், ஜன. 30

யுத்தத்தை நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் சுயநிர்ணய அடிப்படையில் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணுமாறு ஜனாதிபதியையும், கல்வி அமைச்சரையும் கோரும் மகஜர் ஒன்றை ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், அதிபர்கள் கையொப்பமிட்டு அனுப்ப உள்ளனர் இந்தக் கையொப்பம் திரட்டும் இயக்கத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் மேற்கொள்ள உள்ளது.

பிரஸ்தாப மகஜரில் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஆசிரியர்கள், அதிபர்களின்

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாலர் வகுப்பு முதலாம் ஆண்டுக்கான அஷ்டலக்ஷ்மி A B C Book, எழுதுவினைஞர் மற்றும் பரீட்சைகளுக்கான பொது அறிவு (இரண்டு நூல்கள்) ரூபா 60/- எங்கும் கிடைக்கும். ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (5746)

அல்ஷேசன் ஆண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. தர்மகுலசிங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (24245)

Honda ஜெனரேட்டர், வீடியோ கமரா, 180 டெக், J.V.C. மிக்ஸர், ஸ்டில் கமராக்கள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு B.S. போட்டோ, 40A, ராஜேந்திரா றோட், குருநகர். (சி-4304)

யப்பனீஸ் ஸ்பிற்ஸி நாய்க் குட்டிகள், தனிவெள்ளை, கறுப்பு வெள்ளை நிறங்களில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (5759)

அடைவைப்பதற்கு உகந்த Bhamas, Japanese Bantom, சிலம்பு Bantom, வெள்ளடி, கழுத்துவெட்டி Bantom, முட்டைகள் உடன் விற்பனைக்கு உண்டு. 70 6 ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம் (5760)

### மலிவு விற்பனை

திருவள்ளுவர் நாட்காட்டி மற்றும் 3 அளவுகளில் படக் கலண்டர்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். 48 மணி நேரத்தில் தங்கள் விலாசம் பதிப்பித்துக்கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (24711)

### வீடு வாடகைக்கு

பண்புள்ள சிறிய குடும்பத்துக்கு வசதியான தனி வீடு வாடகைக்கு வேண்டும். முற்பணம் கொடுக்கப்படும். கோண்டாவிலில் இருந்து கே. கே. எஸ். வீதி, பலாலி வீதி அடங்கிய யாழ். நகர் வரையிலான பகுதிகள் விரும்பத்தக்கது. கடிதமூலம் உடன் தொடர்பு கொள்ளவும்: இல. 487, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24213)

### தேவை

தனியார் மருத்துவமனை ஒன்றிற்கு மருந்துக் கலவையாளர் தேவை. இருபாலாரும் 10-02-93ற்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும்; தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: த. மெடிக்கல் சென்ரர், ஆனைக்கோட்டை. (5755)

### மணமக்கள் தேவை

இந்து, 7இல் செவ்வாய், குற்றமுள்ள 32 வயது தொழில்நுட்ப வியலாளருக்கும், 28 வயது சகோதரி ஆசிரியைக்கும் மணமக்கள் தேவை. இல 489, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24705)

### தவறிவிட்டது

எனது மோட்டார் சைக்கிள் அத்தாட்சிப் புத்தகம் 27 - 01 - 1993 பிற்பகல் 2 30 மணியளவில் புதிய செம்மணி றோட், வேளா தோப்புக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சசி கூல் பார், கல்வியங்காடு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (24706)

### வெளிவந்துவிட்டது

சகல A L விஞ்ஞான பாடங்களுக்குமான கடந்த கால வினா-விடை புள்ளி விவரத்துடன் விற்பனைக்கு உண்டு. மேலும் விவரங்களுக்கு 'A' Level Centre, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-5793)

### நீபபூஜை

கிரந்த எழுத்தில் எழுதப்பட்டது. ஆசிரியர் தி நடன சபாபதி சர்மா விலை 35/-. கிடைக்குமிடம்; 29, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம், சோதிட விலாச புத்தகசாலை, ஸ்ரீவாலாம்பிகா புத்தகசாலை (பன்றிக்கோடு பிள்ளையார் கோவில் எதிரில்), வண்ணார்பண்ணை. (24715)

### கல்தேக்கு விதை

கல்தேக்கு விதை தேவை. 'மில்க்வைற்' (சி-4298)

## ரெஸப் ஆங்கில நெறி

யாழ்ப்பாணம், ஜன. 30

ஆசிரியர், எழுதுவினைஞர், பாடசாலையில் இருந்து விலகியோருக்கான ஆங்கில வகுப்புகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பலாலி ஆசிரியர் கலாசாலையில் நடைபெறும்.

இதில் சேரவிரும்புபவர்கள் அன்றைய தினம் நடைபெற உள்ள தகுதிகாண் தேர்வுக்கு தோற்ற வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது (த)

## NEW ENGLISH ACADEMY

ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

ENGLISH
O/L (DEC 1993)
(DAY CLASSES)
ஆரம்பம்:
30 1-93 இன்று
காலை 9.00 மணி

(ஆண்டு 8, 9, 10, 11 பாடப்புத்தகங்கள் அலகு ரீதியாக கற்பிக்கப்படும்)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
பிரிவு 3 (சனி/ஞாயிறு வகுப்புக்கள்)

ஆரம்பம்:
இன்று காலை
10.00 மணி

ஆசிரியர்:-
R. SIVALINGAM
(Dip-in-English)
(சி/4384)

## TYPING வகுப்புகள்

தமிழ், ஆங்கில Typing வகுப்புகள் நடைபெறுகின்றன.

**விசேட வகுப்புகள்**

சனி, ஞாயிறு தினங்களில் தமிழ், ஆங்கில Typing வகுப்புகள் தொழில் பார்ப்பவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**FUDO ENTERPRISES**
Fudo office Machines (o)
39/17, power House Rd,
3rd Lane. Jaffna
(சி/4387)

---

உ
சிவமயம்

## யக்ஞோப வீததாரண, பிரம்மோபதேச
(பூநூல்)

# அழைப்பு

பேரன்புடையீர்!

சுவஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான அங்கிரச வருடம் தைத்திங்கள் 21 ஆம் நாள் (03 - 02 - 1993) புதன்கிழமையும், மிருகசீரிட நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய காலை 9 மணி தொடக்கம் 10 மணி 36 நிமிஷம் வரையுமுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது குமாரர்கள்

செல்வன் **பிரதாபன்** ★ செல்வன் **பராபரன்**

ஆகிய இருவருக்கும் வல்வை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் திருவருள் துணை கொண்டு யக்ஞோப வீததாரண, பிரம்மோபதேசம் செய்ய நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சகிதம் வந்திருந்து செல்வர்களை வாழ்த்தி சபையைச் சிறப்பித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

தங்கள் நல்வரவை நாடும்;
ப. மனோகரக் குருக்கள்
கௌரிபாலா.

வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்,
வல்வெட்டித்துறை (24701)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## O/L பிரிவு 2
## DAY CLASSES

செவ். வியா. — 8 மணி-மாலை 2மணி வரை
சனி, ஞாயிறு — 8 மணி-பகல் 12மணி வரை

**ஆரம்பம்: 04 02 - 1993**
8 மணி

★ எமது வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
★ கணித, விஞ்ஞான பாடங்கள் வாரத்தில் 4மணித்தியாலம் நடைபெறும்.

(சி-4318)

---

# கலை, வர்த்தகக் கல்லூரி
## C C. A.

வெலிங்டன் சந்திக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.

## DAY CLASSES
### துரித மீட்டல் வினா-விடை

AL - 92 பரீட்சை முடிவு கிடைத்த பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான

### பகல் நேர வகுப்புகள்

ஆரம்பம்: 02 — 02 — 1993

எமது வழமையான ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| பொருளியல் | ... | திரு. உதயன் |
| கணக்கியல் | ... | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | ... | திரு. குகன் |
| அளவையியல் | ... | திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம் | ... | திரு. ஜோதிஸ்வரன் |
| தமிழ் | ... | திரு. தங்கராசா |
| புவியியல் | ... | திரு. வேலாயுதபிள்ளை |
| அரசியல் | ... | திரு. பஞ்சாட்சரம் |

குறிப்பு:

★ செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு நான்கு நாட்கள் வகுப்புகள் நடைபெறும்.
★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

- நிர்வாகி.

(சி-4367)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத் தலைமையலுவலகம்

# ஊர்காவற்றுறைப் பிரிவின் விசேட பொதுக் கூட்டம்

மேற்படி விசேட பொதுக்கூட்டம் சனிக்கிழமை (06-02 93) பிற்பகல் 2.00 மணிக்குக் கிளைத் தலைமையகத்தில் கிளையினால் நடத்தப்படவிருக்கின்றது. 09-11-92 ஆம் திகதி வரை அங்கத்துவப் பணம் செலுத்திய அங்கத்தவர்கள் மாத்திரம் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றலாம் அங்கத்தவர்களின் தற்போதைய முகவரி இல்லாமையால் தனித்தனிக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. எனினும் கூட்ட நிகழ்ச்சியைத் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்
29-01-93. (C/4319)

---

# சகல பனை, தென்னை
தொழில் வல்லுனர்களுக்குமான

## முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றில் இருந்து கள், பதநீர் சீவுபவர்கள் யாவரும் அந்தந்தப் பகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஆகவே நீங்கள் உங்கள் பகுதிகளில் உள்ள மேற்படி சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்று, தொழில் புரியும் மரங்களுக்கு சங்கங்களால் இலக்கமிட்டுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அனுமதியற்ற, இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால். அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதை கவனத்திற்கொண்டு தங்களுக்கு ஏற்படக்கூடிய தொழில் நட்டங்களை தவிர்த்துக்கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

**வலிகாமம் கொத்தணி**

01. சுன்னாகம் தெ. ப. பொ. கூ. சங்கம்
02. தெல்லிப்பளை ,,
03 பண்டத்தரிப்பு ,,
04. மானிப்பாய் பரிஷ் ,,
05. வட்டு. தொகுதி ,,
06. கோண்டாவில் ,,

அறிவிப்போர்:
வடமாகாண தெங்கு பனம்பொருள் கூ. சங்கங்களின் சமாசம்.

(சி/4316)

---

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்-பளை.
(வரையுள்ளது)

## முக்கிய அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும்,
நுகர்வோர்களுக்கும்.
**பங்குப் பணம் ரூபா 100/-**

1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டத்திற்கமைய உபவிதி 18 (1) ஒரு பங்கின் பெறுமதி ரூ 100/- ஆகும்.

பங்குப்பணப் பெறுமதியை ரூ. 100/- ஆக அதிகரிக்காத தற்போதைய அங்கத்தவர்கள் 05 - 03 - 1993 இற்குப் பின்னர் அங்கத்துவ உரிமையை இழந்து சங்கத்தில் கிளைக்குழு உறுப்பினராகவோ, பொதுச் சபை உறுப்பினராகவோ, பணிப்பாளர் சபை உறுப்பினராகவோ பதவி வகிக்க முடியாததுடன், வாக்களிக்கும் உரிமையினையும் இழந்துவிடுவர்.

05 - 03 - 1993 இற்குப் பின்னர் பங்கு நிலுவையைச் செலுத்தினாலும், செலுத்திய திகதியிலிருந்து ஒரு வருடம் அங்கத்துவ உரிமையை அனுபவிக்கக் காத்திருக்க வேண்டும்.

எனவே காலதாமதமின்றி தற்போது அங்கத்தவர்களாக இருப்பவர்கள், தமது பங்குப் பணத்தை ரூபா 100/- ஆக அதிகரிப்பதற்கு 05 - 03 - 1993 இற்கு முன்னர் தங்கள் கிளைகளில் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் பூரணப்படுத்துவதுடன், சங்க வளர்ச்சிக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மேலதிக விவரங்களுக்குச் சங்க தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

த. நாகேஸ்வரன்,
செயலாளர்.

செ. மார்க்கண்டு,
தலைவர்.

(சி-4309)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# வேடிக்கை பார்ப்பது தானா?

இம்மாதம் இரண்டாம் திகதி கிளாலிக் கடலில் கடற்படையினர் நடத்திய படுகொலைகளின் அவல ஓலம் இன்னும் ஓயவில்லை. கடலில் பலியானவர்களின் எண்ணிக்கையை சரியாகக் கணக்கெடுக்க முடியாத அளவுக்கு படுகொலையில் உயிர்துறந்தவர்கள் பற்றிய தகவல்கள் இன்னும் வந்துகொண்டிருக்கின்றன.

இந்த வேளையில் கடற்படையினர் மீண்டும் கடந்த புதனன்று தமது தமிழர் வேட்டையை கிளாலியில் நடத்தியிருக்கிறார்கள். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான—கிடைக்காத பொருளாகிவிட்ட மண்ணெண்ணெய்யை ஏற்றிவந்த தொழிலாளர் ஐந்து பேர் பலி எடுக்கப்பட்டுள்ளனர். மண்ணெண்ணெய்யும் தீப்பற்றி நாசமாகிவிட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதைகள் எல்லாவற்றையும் ஆயுதப் படைகள் அடைத்துவிட்டன—மூடிவிட்டன. யாழ்ப்பாண மக்கள் வெளியிடங்களுக்குப் போய் வருவதற்கும், பொருள்களைக் கொண்டு வருவதற்கும் உள்ள ஒரே ஒரு பாதை கிளாலிதான். ஆகையால் பொதுமக்கள் அதனூடாகவே பயணம் செய்ய வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

இதனைத் தெரிந்துகொண்டும், தெரியாதது போல கிளாலிக் கடலேரிப் பகுதியை அரசு தடைசெய்யப்பட்ட பிரதேசமாக்கியது அடாத்தானதாகும். அரசின் தடையை மீறிப் பயணம் செய்யும் பொதுமக்களையே சுடுகிறோம் என்று அரசு நியாயம் கற்பிக்க முனைவது சுத்த அபத்தமானதும் அநாகரிகமானதுமாகும். அரசு கிளாலிப் பாதையைத் தடைப்பிரதேசமாக அறிவித்துவிட்டதால் மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியாதவாறு முடங்கிக் கிடந்து சாகமுடியாது. பாதுகாப்புள்ள வேறு பாதை இல்லாதபோது அவர்களுக்கு வேறு மாற்று வழி என்ன?

வேறு எங்கும் போகாமல் குடாநாட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்குமாறு தமிழர்களைத் தடுப்பது அடக்குமுறையின், மனிதாபிமான மோசத்தின் அடிப்படை உரிமை மீறலின் உச்சக்கட்டமாகும்.

அநியாய விதிமுறைகளை அமுல் செய்து மக்களை அடக்கி வைக்க முயலும்போது அவர்கள் அவற்றை மீறுவது ஒன்றும் புதிதல்ல. அது இயல்பானதே. மக்களின் நாளாந்த வாழ்வுரிமையைத் தடுப்பது துரோகமானது. அந்தத் துரோகத்துடன் மக்கள் ஒத்துப்போக முடியாது. ஒத்துப்போக மாட்டார்கள்.

அதனாலேயே கிளாலிக் கடற்பயணம் ஆபத்து நிறைந்தது, கஷ்டமானது, சிரமமானது என்று தெரிந்தும், அனுபவித்தும் குடாநாட்டுத் தமிழ் மக்கள் அதனூடாகப் பயணம் செய்கிறார்கள். இதனை அரசாங்கம் புரிந்துகொள்ள மறுக்கும். ஆயுதப் படைகள் அட்டூழியம் புரியும்.

இவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளிவைப்பதற்கு அரசுக்கு விருப்பம் இருந்தால் அரசு பூநகரிப் பாதையையாவது மக்கள் பாவனைக்குத் திறந்துவிடலாம். ஆனால் அது குறித்து அரசு வெறும் பேச்சளவில் நிற்கிறதே அன்றி காரியம் நடக்கவில்லை. பூநகரியில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி மக்கள் பாதுகாப்புடன் பயணம் செய்வதற்கான ஏற்பாடு எதனையும் செய்யாது தனது பொறுப்பைத் தட்டிக் கழித்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்திடம் சுமத்திவிட்டு வேடிக்கை பார்க்கிறது. தமிழர்களுக்கு அரசு இந்த லட்சணத்தில் தான் உரிமைகளையும் வழங்கும் என்று மதிப்பிடுவதைத் தவிர என்ன செய்ய முடியும்?

## உற்சவம்

ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் பாலய மணவாளக் கோலத் திருவிழா இன்று நடைபெறும். காலை 9 மணி முதல் 12 மணி வரை சங்காபிஷேகம் நடைபெறும். (உ-45)

## இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் ஆதரவில் இடம் பெற்றுவரும் சைவசித்தாந்தம் பற்றிய பொது விரிவுரைத் தொடரின் 5ஆவது அமர்வு இன்று சனிக்கிழமை காலை 9மணி முதல் 12 மணி வரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

சுவாமி சித்ருபானந்தர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த அமர்விலே இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் "சைவசித்தாந்தத்தில் ஒழுக்கவியல்" என்ற பொருளிலும் இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் "சைவத்தில் கிரியைகள்" என்ற பொருளிலும் விரிவுரைகளை வழங்கவுள்ளனர். (க)

o o o

குருநகர், ஜன. 30

இன்று மாலை 5 மணிக்கு யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் "இலக்கிய அவை" கூடும் "மல்லிகை" ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா இலக்கியக் கருத்துரையை நிகழ்த்துவார். (உ-51)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 30

சுண்டிக்குளி இறைமக்கள் பயிற்சி நிலையம் நடத்தும் "பொது நிலையினர் பணி" என்ற பொருள் பற்றிய கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சுண்டிக்குளி பரியோவான் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

அருட்தந்தை, ஜே. ஜெயசீலன், அருட்திரு எஸ். பி. நேசகுமார், அருட்திரு ஜே. யோகராசா ஆகியோர் உரையாற்றுவார்கள். (க)

o o o

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளையினர் ஏற்பாடு செய்துள்ள தையல் பொருட் காட்சியும் விற்பனையும் இன்று காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும். (த)

## பயிலுநர் ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஜன 30

யாழ். மாவட்டத்தில் உள்ள பத்து பிரதேச தொலைக் கல்வி நிலையங்களிலும் 1991/1993 காலப் பகுதியில் பயிலுநர் ஆசிரியராக கல்வி பயில்வோருக்கான கலந்துரையாடல் ஒன்றை யாழ். கல்வித் திணைக்களம் நாளை மறுதினம் நடத்தவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக பயிலுநர் ஆசிரியர்களை அந்தந்த தொலைக் கல்வி நிலையங்களில் காலை 10 மணிக்கு சமூகம் அளிக்கும்படி தொலைக் கல்வி இணைப்பாளர் கேட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் மார்ச் 20ஆம், 2 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் பரீட்சை தொடர்பாக ஆராயப்படவிருக்கிறது. (உ-7)

## இலவச வைத்திய சேவை

யாழ்ப்பாணம், ஜன 30

யாழ். திவ்ய ஜீவன சங்கத்தின் ஆதரவில் நலலூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகே உள்ள மேற்படி சங்க மண்டபத்தில் நாளை காலை 8 மணி முதல் இலவச வைத்திய சிகிச்சை நடைபெறும். பொது வைத்திய சிகிச்சைகளை டாக்டர் கே. சிவநேசன் நடத்துவார். (த)

# 'ஜெ' அரசு மீது வழக்கு போட அனுமதி கோரி தி.மு.க. மனு

## உயர் நீதிமன்றில் தாக்கல்

முதலமைச்சர் மற்றும் அவரது அமைச்சரவை சகாக்களின் மீதும் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர்கள் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்குமாறு கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தி. மு. க. மனுச் செய்துள்ளது.

தி. மு. க. சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் க. அன்பழகன் இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

மாநில ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் அடங்கிய மகஜரின் அடிப்படையில் இவ்வழக்கைத் தொடர அனுமதி தரும்படி உயர் நீதிமன்றத்தை தி மு க. கோரியுள்ளது (உ எ)

# அ.தி.மு.க. அரசுக்கு பாரதீய ஜனதா பாராட்டு

சென்னை, ஜன. 30

தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கை அ. தி. மு. க அரசு நல்ல முறையில் பராமரித்து வருவதாக பாரதீய ஜனதா கட்சி பாராட்டியுள்ளது.

கன்னியாகுமரிக்கு விஜயம் செய்த பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி செய்தியாளர் மத்தியில் பேசியபோது இப்பாராட்டைத் தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தில் வகுப்பு ஒற்றுமை சிறந்த முறையில் பேணப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

காங்கிரஸ் கட்சியுடன் இதுவரை காலமும் தேர்தல் கூட்டை வைத்திருந்த அ. தி. மு. க, அந்தக் கூட்டை முறித்துக் கொண்டு பாரதீய ஜனதாக்கட்சியுடன் அணிசேரலாம் என்ற செய்திகள் அடிபடத் தொடங்கியிருக்கும் இவ்வேளையில், பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதான தலைவர் ஒருவர் அ தி மு. கவைப் பாராட்டியிருப்பது முக்கிய அரசியல் மாற்றம் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. [உ-எ]

# உயில் சட்டத் திருத்தம்: இராணுவத்தினருக்கு பயன்

## நாடாளுமன்றில் அமைச்சர் டிரோன்

கொழும்பு, ஜன. 28

"இப்போது நீதி அமைச்சர் 18 வயதிலும் உயில் எழுதுவதை அனுமதிக்கும் சட்டத்தைச் சமர்ப்பித்துள்ளார். இது காலத்துக்கு ஏற்ற சட்டத் திருத்தம். குறிப்பாக இராணுவத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இதனால் பயன் பெறலாம்."

பதினெட்டு வயதிலும் உயில் எழுதலாம் என்று வகுக்கும் சட்டத்தை ஒட்டி நாடாளுமன்றத்தில் கடந்த 20 ஆம் திகதி நடந்த விவாதத்தின் போது சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சர் திரு. டிரோன் பெர்னாண்டோ இவ்வாறு கூறினார்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற எதிரணி உறுப்பினர் திரு வாசுதேவ நாணயக்கார –

'வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வராவிடில் இளைஞர்கள் மேலும் மரணமடைவர். எனவேதான் உயில் எழுதும் உரிமையை இளைஞர்களுக்கு அரசு வழங்குகிறது'' என்று கூறினார். (ஒ-க)

## நாளை

யாழ்ப்பாணம் ஜன 30

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் (க)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஜன. 30

யோகமும், போசாக்கும் பற்றிய கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் ந. சிவராஜா, அகில இலங்கை யோகாசன ஸ்தாபனத்தின் பணிப்பாளர் யோகாசனக் கலாநிதி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள் (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 30

வடஇலங்கை ஹோமியோபதி சங்கம், வடஇலங்கை அக்குபங்சர் சங்கம் ஆகியவற்றின் மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

சர்வதேச திறந்த வெளி மாற்றுமுறை மருத்துவப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்படி சங்கங்கள் நடத்தும் இப்பட்டமளிப்பு விழாவில் டாக்டர் ஏ கிருஷ்ணசாமிக்கு அவருடைய வைத்திய சேவையைப் பாராட்டி "வைத்திய பூஷண" என்ற பட்டம் வழங்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைப் பீடாதிபதி டாக்டர் எஸ். பவானி, யாழ். பல்கலைக்கழக வர்த்தக நிர்வாகப் பிரிவுத் தலைவர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், வடகிழக்கு மாகாண மாற்றுமுறை மருத்துவப் பணிப்பாளர் டாக்டர் பி. ரோமகேஸ்வரன் ஆகியோர் இவ்விழாவில் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள் (த)

## புலிகளுடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது

1986 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் கிட்டு, யாழ். தளபதியாக இருந்த போது, ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவரான காலஞ்சென்ற விஜேகுமாரணதுங்காவுடன் சேர்ந்து ஒஸி அபேகுணசேகரா யாழ்ப்பாணம் வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

யாழ். கோட்டை இராணுவ முகாமுக்கு ஹெலிக்கொப்டர் மூலம் வந்திறங்கிய அவர்கள் இருவரையும் கோட்டைக்கு வெளியே வைத்து விடுதலைப் புலிகள் வரவேற்று நகருக்குள் கூட்டிச் சென்றனர் புலிகளின் காவலில் இருந்த இரு இராணுவச் சிப்பாய்களை விடுவிப்பது குறித்து அவர்கள் அப்போது புலிகளுடன் பேச்சு நடத்தியிருந்தனர்.

பின்னர் —

1988 ஆம் ஆண்டு இறுதியில் — இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்தபோது — தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக ஒஸி யாழ்ப்பாணம் வந்து அசோக் ஹோட்டலில் தங்கியிருந்தார். (உ-6)

# பிரேமாவின் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன 30

ஜே. வி. பி இயக்கத்துக்கு புத்துயிர் அளிப்பதில் அரச விரோத சக்திகள் ஈடுபட்டுள்ளன என்று ஜனாதிபதி பிரேமதாஸா குற்றஞ் சாட்டியுள்ளார்.

# அளவெட்டி கோவில் பூசகர் அல்லர்

இளவாலையிலிருந்து திரும்பி வந்தவர்களில் ஒருவரான ஸ்ரீநிவாசன் குணநாதசிவம், அளவெட்டி வடக்கு ஆதி வீரபத்திரர் கோவில் பூசகர் அல்லர் என்று —

மேற்படி கோவில் பூசகரும் பிரதம குருவுமான சிவஸ்ரீ க. முருகையாக் குருக்கள் அறியத் தருகிறார்.

25-01 93 திகதிய உதயனில் வெளிவந்த "வலி. வடக்கு ஆலயங்களின் விக்கிரகங்கள் வீதிகளில்" என்ற செய்திக்குரிய பேட்டியை வழங்கிய திரு ஸ்ரீநிவாசன் குணநாதசிவம் பலாலிப் பகுதியிலுள்ள கோவில் ஒன்றின் பூசகர் என்றும் அறியவந்துள்ளது. (அ)

## வடபகுதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவை உடைக்கப்பட்டதாகவும் —

இனிமேல் எல்லாக் கடிதங்களையும் சோதனை செய்வதைத் தவிர்த்து, காலக் கிரமத்தில் அவற்றை கப்பல்களில் உடன் வடக்கே அனுப்ப தாம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார் —என்று சொன்னார். (த-5)

## வாங்கி நான்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்தி செய்த நிறுவனத்தின் பரிசீலனைக்குப் பின்னர் அவற்றை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது

விமானங்கள் பழுதடைந்தமையால் புதிதாக ஆரம்பித்த சேவைகளை எயர் லங்கா இடைநிறுத்தவேண்டி ஏற்பட்டது என்றும் —

இதனால் ஏற்பட்ட அபகீர்த்திக்காக விமான உற்பத்தியாளர்களிடம் இருந்து நஷ்டஈடுகோர எயர் லங்கா தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ 6)

## யுத்தத்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையொப்பங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பிரஸ்தாப கையொப்ப மகஜரில் பின்வரும் அம்சங்களும் அடங்கும் என அறியவருகிறது

★ கடந்த இரண்டரை வருட கால யுத்தத்தினால் ஆசிரியர்கள் பல கஷ்டங்களை அடைந்துள்ளனர்: அமைதி வாழ்க்கை குலைந்து, அடிப்படை வசதிகள், உரிமைகள் மறுக்கப்பட்டு, பொருளாதார சுமையுடன் சேவை புரிகிறார்கள் எனவே அதிபர்கள் ஆசிரியர்களுக்கு 18-10 90 ஆம் திகதிய 43/90 இலக்க சுற்று நிருபத்துக்கு அமைய ஆபத்துக் கால ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்.

★ பஸ், ரயில், தபால், தொலைபேசி போன்ற அடிப்படை சேவைகளை இழந்திருப்பதனால் இப்பகுதியில் உள்ள சகல பாடசாலைகளையும் மிக கஷ்டப் பிரதேச பாடசாலைகளாகக் கருதி அதற்குரிய அலவன்சான 1⁄ வீதத்தை 1990 ஜூனில் இருந்து வழங்க வேண்டும்

பிரிவுச் செயலகங்களின் கீழ் கல்வி நிர்வாகம் கொண்டு வரப்படும்போது, கல்வி, அபிவிருத்தி, கல்வி நிர்வாக சேவைகள் அதிபர், ஆசிரியர் சேவைகள் பாதிப்படையாத முறையில் முழுமையான தனித்துவமுடைய பிரிவுக் கல்விச் செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும்

(அ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிவராசா

(நேரக்கணிப்புப்பகுதி, லங்கா சிமெந்து லிமிட்டெட், கே. கே. எஸ்.)

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், லங்கா சிமெந்து லிமிட்டெட் உத்தியோகத்தருமான கந்தையா சிவராசா காலமாகி விட்டார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் அல்வாயில் நடைபெறும் இவ்வறிவித்தலை உறவினர்கள், சக ஊழியர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

இளவேனில்
அல்வாய் வடக்கு. (சி 4322)

## திருமதி லுயி சவுந்தரநாயகம் வில்லியம்ஸ்

திருமதி சவுந்தரம் வில்லியம்ஸ் காலமானார். அன்னார் காலஞ்சென்ற L. S. வில்லியம்ஸின் அன்பு மனைவியும், திருமதி இந்திராணி ஜெயராஜா, திருமதி சவுந்தரராணி யேசுதாசன், திருமதி விமலராணி செல்வராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருவாளர்கள் க ஜெயராஜா, காலஞ்சென்ற Dr. D. M. யேசுதாசன், R. F. செல்வராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி இரேணுகுமாரி டானியல்ஸ், திருமதி சுவர்ணகுமாரி தேவராஜா, திரேன்திரன், விமலேந்திரன், தமயந்தி, துஷ்யந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், றொஷெல், மிஷல் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (30-01-1993) சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வட்டுக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
க. ஜெயராஜா,
(மருமகன்

கல்லூரி ஒழுங்கை,
வட்டுக்கோட்டை

(24717)

## செல்வி கனகரெத்தினம் ஜெகரூபி

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் 605/1, கே கே எஸ் வீதியில் வசித்தவருமாகிய செல்வி கனகரெத்தினம் ஜெகரூபி 24-1-93 இல் காலமானார்.

இவர் P. T. கனகரெத்தினம் - சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகளும், ஜீவராணி, ஜீவரஞ்சினி, அம்பிகாதேவி, யசோரதி, செந்தில்ரூபன், தர்மரூபன் ஆகியோரின் சகோதரியும், மகேந்திரன், சிவநாதன், சகளிகாந்தன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற உலகநாதன், தம்பிராசா, சண்முகம், கனகரெத்தினம், தெய்வேந்திரன், காலஞ்சென்ற பரமசாமி, நாகேஸ்வரி, கனகேஸ்வரி ஆகியோரின் மருமகளும், இலட்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30-1-93) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கோம்பயன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
நா. கனகரெத்தினம்

605/1, கே கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [24724]

## வேலுப்பிள்ளை சாந்தலிங்கம்

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சாந்தலிங்கம் 24 - 1 - 93 இல் நயினாதீவில் காலமானார்.

இவர் முத்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சிதம்பரம், ஆகியோரின் சகோதரரும் மகாதேவா, இந்திராணி, வனிதாமணி, பஞ்சாட்சரம், இராசலெட்சுமி, சோதிமலர், வெற்றிவேற்பிள்ளை ஆகியோரின் தந்தையாரும், யோகேஸ்வரி, தர்மலிங்கம், சுவாமிநாதன், விஜயலட்சுமி, ஸ்ரீஸ்கந்தராசா, கருணலிங்கம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நயினாதீவில் நடைபெற்றன.

தகவல்:
வீ. கருணலிங்கம்
(ஆசிரியர், புங்குடுதீவு ம வி)
மருமகன்

கோவில் வீதி,
கட்டப்பிராய்,
கோப்பாய் தெற்கு. ]24722)

## நடராசா சரஸ்வதியம்மா

அளவெட்டி தெற்கு பெருமாக்கடவையைச் சேர்ந்தவரும், தற்போது புதுச்செம்மணி வீதி, கல்வியங்காட்டில் வசித்தவருமான நடராசா சரஸ்வதியம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. நடராசாவின் (நடேசு) அன்பு மனைவியும், பூஷணாதேவி, ஸ்ரீராம்குமார் (ஆசிரியர், மெய்கண்டான் மகா வித்தியாலயம், இளவாலை), இலட்சுமணகுமார் (ஆசிரியர் அருணோதயக் கல்லூரி, அளவெட்டி), நகுலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகநாதன் (இ. போ ச, கோண்டாவில்), மதிவதனி, டாக்டர் வசந்தகுமாரி (வல்வெட்டித்துறை), சற்குணம் ஆகியோரின் அன்பு மாமியாரும், நதிபரன், ஸ்ரீகஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புதுச்செம்மணி வீதி, கல்வியங்காட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ப. யோகநாதன்
(மருமகன்)

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (24725)

## மட்டக்களப்பில்

12 ஆவது ஜனாதிபதி இடம்பெயர் சேவை, மட்டக்களப்பில் நடத்தப்பட விருக்கிறது

11 ஆவது ஜனாதிபதி இடம்பெயர் சேவை நேற்று திருகோணமலையில் ஆரம்பமானது. (உ-எ)


CHEMISTRY

திரு. சிவசோதி B.Sc.

PAPER CLASSES

சனி - ஞாயிறு

பிரிவு I 3-00 மணி
பிரிவு II 4-00 மணி
பிரிவு III 5-00 மணி

மாணவர் வசதிக்கேற்ப ஏதாவது ஒரு பிரிவில் அனுமதிபெறலாம். ஒவ்வொரு பிரிவிலும் முழுப் பாடத் திட்டமும் மீட்டல் வினா - விடை கற்பித்து முடிக்கப்படும்.

★ AL-95 பிரிவு மாணவர் அல்ல என்பதை உறுதிப்படுத்தினால் மட்டுமே அனுமதி.

ஆரம்பம்: 30-01-1993

BOND INSTITUTES,
யாழ்ப்பாணம்.
(சி-4312)


# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை கோபாலபிள்ளை

புளியங்கூடலை பிறப்பிடமாகவும், தற்போது இருபாலையில் வசித்தவருமாகிய சிதம்பரப்பிள்ளை கோபாலபிள்ளை நேற்று வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கமலாதேவி, கலைமகள், சந்திரபாலன், குமரகுருபரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சிவம், சோதிநாதன், விஜயலட்சுமி, ரூபினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
கோ. சந்திரபாலன்
(மகன்)

அன்பழகன் வீதி,
(விதானையார் ஒழுங்கை),
இருபாலை. (24727)

## இலங்கைநாயகம் நாகேந்திரன்

இளவாலையை பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கைநாயகம் நாகேந்திரன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்) நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சிவநாயகியின் அன்புக்கணவரும், ரவீந்திரன், விஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரியின் சகோதரரும், காலஞ்சென்ற கனகசபையின் சகலனும், சிவபாக்கியம், விவேகானந்தராசா ஆகியோரின் மைத்துனரும் மைதிலி, சுமதி ஆகியோரின் சிற்றப்பாவும் ஜானகியின் மாமனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை 30 01.93) பிற்பகல் 2மணிக்கு சுதுமலையில் நடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்;
நா. விஜேந்திரன்
(மகன்)

''அண்ணாமலை
வைத்தியசாலை''
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (24728)


## பாலர் ஆசிரியர் பயிற்சி

பாலர் கல்விக் கழகத்தினரால் நடத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி மீண்டும் 06 - 02 - 93 இல் ஆரம்பமாகிறது. பயிற்சி முடிவில் தராதரச் சான்றிதழ் வழங்கப்படும். விவரங்களுக்கு உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

பாலர் கல்விக்கழகம்
49/5, யாழ் தோட்,
(ஸ்ரீத தியேட்டருக்கு அருகில்,)
யாழ்ப்பாணம். (சி/4306)


அகில இலங்கைக்
கம்பன் கழகம்
நடத்தும்
ஸ்ரீ தியாகராஜ
சுவாமிகள்

# இசையாராதனை

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்
காலம்: 31 - 01 - 1993 ஞாயிறு
காலை 9-00 மணி, மாலை 2-30 மணி

✶ காலை நிகழ்ச்சிகள் ✶

தலைவர்: ''துர்க்கா துரந்தரி'' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

பஞ்சரத்தின கீர்த்தனைகள் இசைத்தல்: ஈழத்தின் பிரபல இசைக் கலைஞர்கள் அனைவரும் கலந்து கொள்வர்

இசைப் பேரறிஞர் - 1993 விருது வழங்கல்

பெறுபவர்: சங்கீத பூஷணம் திரு. கே. ஆர். நடராசா அவர்கள்

வழங்குபவர்: பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

நாதஸ்வர இசையாராதனை:

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. எம். பஞ்சாபிகேசன் | திரு கே நித்தியானந்தம் |
| திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி | திரு. பி. முருகதாஸ் |
| திரு. வீ கே. கானமூர்த்தி | திரு. த, உதயசங்கர் |
| திரு. வீ. கே. பஞ்சமூர்த்தி | திரு. எஸ். சுந்தரன் |
| திரு. எஸ். சிதம்பரநாதன் | திரு. எஸ். இராமதாஸ் |
| திரு என். கே கணேசன் | |
| திரு. ஆர். கேதீஸ்வரன் | |
| திரு. எம். பி நாகேந்திரன் | |

தீபாராதனை:

✶ மாலை நிகழ்ச்சிகள் ★

தலைவர்: பேராசிரியர் அ சண்முகதாஸ் அவர்கள்

மங்கள இசை: திரு. பி. எஸ். பிச்சையப்பா, ரவி, ரஜி குழுவினர்

இசையாராதனை:

பாட்டு: திருமதி வாசஸ்பதி, ரஜீந்திரன், சங்கீத பூஷணம் திரு. கே. ஆர் நடராசா, சங்கீத பூஷணம் - திரு. எல். திலகநாயகம் போல், சங்கீத பூஷணம் திரு. எஸ். பத்மலிங்கம்.

வயலின்: சங்கீத பூஷணம் திரு வி. கே. குமாரசாமி, இசை ஞான திலகம் - திரு. உ. இராதாகிருஷ்ணன், திரு. ஆர். கேசவமூர்த்தி, சங்கீத கலா வித்தகர் திரு. பா. கண்ணன்

மிருதங்கம்: சங்கீதரத்தினம் திரு. எஸ். மகேந்திரன், சங்கீதரத்தினம் எம். சிதம்பரநாதன், சங்கீத கலாவித்தகர் திரு. க கண்ணதாசன்

தவில்: திரு. பி. ரவீந்திரன்
கடம்: திரு. சதா வேல்மாறன்
கஞ்சிரா: திரு. ச. நாகராஜன்
மோர்சிங்: திரு எஸ். இராஜா

— அனைவரும் வருக! —

கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்

(சி-4308)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org